

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (9.05.2023) முகாம் அலுவலகத்தில், பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் சாதனை படைத்த திண்டுக்கல், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி ச. நந்தினி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது அம்மாணவியின் பெற்றோர் உடனிருந்தனர்.




செங்கல்பட்டு ஆட்சியர் அலுவலகத்தில் திருக்கழுக்குன்றம் தாலுகா கீரப்பாக்கம் பிலஸ்ஸிங்ஸ் மெட்ரிக் உயர் நிலைப் பள்ளியை சேர்ந்த லக்ஷ்மி பிரியா என்ற பன்னிரண்டாம் வகுப்பு மாணவி பொது தேர்வில் மொத்த மதிப்பெண் 596 பெற்று பள்ளியின் முதல் மாணவியாகவும் மாவட்டத்தில் அதிக மதிப்பெண் பெற்றமைக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சால்வை அணிவித்து வாழ்த்தினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், பள்ளியின் முதல்வர் தா.சோபியா அன்புச்செழியன் மற்றும் மாணவியின் தாயார் லீலாவதி உள்ளனர்.

## கர்நாடகாவில் பிரசாரம் ஓய்ந்த பிறகு வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதா?

### பிரதமர் மோடி மீது நடவடிக்கை எடுக்க காங்கிரஸ் கோரிக்கை!

புதுடெல்லி, மே 10 -

கர்நாடக மாநிலத்தில் இன்று சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் பிரசாரம் நேற்று முன்தினம் மாலையுடன் நிறைவு பெற்றது. அதன் பின்னர் வாக்குப்பதிவு முடியும் வரை யாரும் தேர்தல் பணிகளில் ஈடுபடக்கூடாது என தேர்தல் நடத்தை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி நேற்று கர்நாடக மக்களுக்கு கடிதம் எழுதினார். அதில், கர்நாடகாவை நாட்டிலேயே முதன்மை மாநிலமாக மாற்றும் பணிக்காக உங்கள் ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கிறேன் என கேட்டுக்கொண்டார்.

தேர்தலுக்கு முந்தைய நாளில் பிரதமர் மோடியின் இந்த வேண்டுகோள், தேர்தல் விதிமீறல் என பலரும் கருத்து தெரிவித்தனர். காங்கிரஸ் கட்சியும் கடும் ஆட்சேபம் தெரிவித்தது. இது தேர்தல் நடத்தை விதிகளை அப்பட்டமாக மீறும் செயல் என்று கூறியது. அத்துடன், இந்த விஷயத்தை தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் (கர்நாடகா பொறுப்பு) ரன்தீப் சுர்ஜேவாலா தலைமை தேர்தல் ஆணையருக்கு கடிதம் அனுப்பி உள்ளார். அதில், தேர்தல் நடத்தை விதிகளை மீறி, பிரதமர் நரேந்திர மோடி கர்நாடக வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்ததற்காக, அவர் மீது தேர்தல் ஆணையம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி உள்ளார். சட்டங்கள் பிரதமருக்கு பொருந்துமா இல்லையா? என்றும் அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.

### அனைத்து நியாய விலைக்கடைகளிலும்

## ஆன்லைன் பரிவர்த்தனை செய்யப்படும்!

சென்னை, மே - 10

தமிழ்நாட்டில் மே மாதம் இறுதிக்குள் அனைத்து நியாய விலைக்கடைகளிலும் ஜி-பே, பே-டி.எம்., வசதி மூலம் பணப்பரிமாற்றம் செய்யப்பட இருப்பதாக கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் முதன் முறையாக காஞ்சிபுரத்தில் உள்ள 683 நியாய விலைக் கடைகளிலும் க்யூஆர் கோர்டு மூலம் பணப்பரிமாற்றம் செய்யும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கோவை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தூத்துக்குடி உள்ளிட்ட 12 மாவட்டங்களில் யு.பி.ஐ. மூலம் பணப்பரிமாற்றம் செய்யும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு வாரத்திற்குள் அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் யு.பி.ஐ. மூலம் பணப்பரிமாற்றம் செய்யும் வசதி அறிமுகப்படுத்தப்படும் என கூட்டுறவு துறை தெரிவித்துள்ளது. எனவே வரும் 31 ஆம் தேதிக்குள் அனைத்து நியாய விலைக்கடைகளிலும் ஜி-பே, பே-டி.எம்., யு.பி.ஐ. வசதி செய்து கொடுக்க அனைத்து மண்டல பதிவாளர்களுக்கும் கூட்டுறவுத்துறை உத்தரவிட்டுள்ளது.

### வான்புகழ் திருவள்ளுவரின் நினைவினைப் போற்றும் வகையில்

## ரூ.15 கோடி மதிப்பீட்டில் திருவள்ளுவர் திருக்கோயில் மேம்படுத்தப்படும்!

### ஆய்வுக்குப் பின் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்.

சென்னை, மே 10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (09.05.2023) சென்னை, மயிலாப்பூர், திருவள்ளுவர் திருக்கோயிலில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள திருப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

2023 - 2024 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற மானியக் கோரிக்கை அறிவிப்பின் போது "சென்னை, மயிலாப்பூர், முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயிலுடன் இணைந்த திருவள்ளுவர் திருக்கோயிலுக்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்" என அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் திருப்பணிகள் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தினை முழுமையாகப் பார்த்து திருக்கோயிலையும் ஆய்வு செய்தோம்.

அந்த வகையில், திருக்கோயிலின் நுழைவு வாயிலை புதுப்பித்தல், பொற்றாமரை குளம் போன்ற வடிவமைப்பை உருவாக்குதல், அறம், பொருள், இன்பத்திற்குண்டான விளக்கமுறையாக பதாகைகளை உருவாக்குதல், ஏற்கனவே இத்திருக்கோயிலில் அமைந்திருக்கின்ற திருவள்ளுவர் மற்றும் வாசுகி சன்னதிகளை புதுப்பித்தல், திருவள்ளுவரின் பெற்றோர்கள் வடிவமைக்கப்பட்டுள்ள சன்னதியை புதுப்பித்தல், கருமாரியம்மன், சிவன், காமாட்சியம்மன் சன்னதிகளை புதுப்பித்தல், கூடுதலாக இத்திருக்கோயிலின் நூலகத்தினை புதுப்பொலிவுடன் மேம்படுத்துதல், மடப்பள்ளியை புதுப்பித்தல், திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்தித் தருதல், அர்ச்சகர்கள் குடியிருப்பை புதுப்பித்தல் என ஒட்டுமொத்தமாக திருக்கோயிலை மேம்படுத்திடும் வகையில் ஆய்வினை மேற்கொண்டு இருக்கின்றோம்.

வாழ்ந்து மறைந்தாலும், நம்முடைய மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் திருவள்ளுவருக்கு ஒரு கோட்டத்தைக் கண்டார். கன்னியாகுமரியில் வான் உயர வள்ளுவருக்கு சிலையை அமைத்தார். திருக்குறளுக்கு உரை எழுதினார். அந்த வகையில் சுமார் 700 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருவள்ளுவர் கற்சிலை அமைந்திருக்கும் 500 ஆண்டுகளுக்கு மேலான இத்திருக்கோயிலுக்கு பக்தர்கள் விரும்பி வருகின்ற வகையிலும், சுற்றுலாத்தலமாகவும் மேம்படுத்திடும் வகையிலும் உருவாக்கிட வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய வழித்தோன்றல் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் ரூ.15 கோடியில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டிருக்கின்றார். அந்த வகையில் வான்புகழ் திருவள்ளுவரின் நினைவினைப் போற்றுகின்ற வகையில் இத்திருக்கோயில் வடிவமைக்கப்படும்.

இத்திருக்கோயிலின் திருப்பணிகளை மேற்பார்வையிடவும், துரிதப்படுத்தவும் இந்து சமய அறநிலையத்துறையின் உயர்மட்டக் ஆலோசனைக் குழு உறுப்பினர் திருமதி தேச மங்கையர்கரசி அவர்களைப் பணித்திருக்கின்றோம். அவரும் இதில் அதிக அக்கறை எடுத்து விரைவுப் படுத்துகின்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றார் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் க.வீ.முரளீதரன், உயர்மட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் திருமதி தேச மங்கையர்க்கரசி, சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, செயற்பொறியாளர் பெ. கோவிந்தராஜீலு, திருக்கோயில் செயல் அலுவலர் கொளஞ்சி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

